★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 65630

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆடி 29உ திங்கள் (13—8—56) ★ ★ வெளியீடு: ஆடி 30உ செவ்வாய் (14—8—56) [இதழ் 54

சுறுசுறுப்பாக நடைபெறுகிறதாம்!

புதுடில்லி ஆக. 13—

மத்திய சர்க்கார் கல்வி இலாகாவின் இந்தி பிரிவில், இந்தியில் கலைச் சொற்கள் தயாரிக்கும் வேலை வெகு சுறு சுறுப்பாக நடைபெற்றுக் கொண்டு வருகிறதாம்!

60,000 கலைச் சொற்கள் இதுவரையில் தயாரிக்கப் பட்டுவிட்டதாகத் தெரிகிறதாம்!

பல விஞ்ஞானப் பிரிவுகளுக்கும், கலைகளுக்கும் அடிப் படைக் கலைச்சொற்கள் அநேகமாக 1960-ம் ஆண்டிற்குள் தயாரிக்கப்பட்டுவிடும் என்று செய்தி ஒன்று கூறுகிறது.

இந்தியாவின் ஒன்பதாண்டு கால 'சுதந்திரம்'

அனுமந்தையாவின் இராஜிநாமா

ஏற்றுக்கொள்ள முடிவு

பெங்களூர் ஆக. 12—

மைசூர் முதன்மந்திரி அனுமந்தையாவின் இராஜிநாமாவை ஏற்றுக்கொள்வது என்று அவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரத் திட்டமிட்டிருந்த 57 பேரில் 53 பேர்கள் ஒப்பியிட்டனராம்.

நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தில் கையொப்பமிட்டிருந்தவர்களைத் தவிர இதர சில பெரும் காங்கிரஸ் தலைவர்களும் கலந்துகொண்ட கூட்டத்தில் தான் இந்த முடிவு மேற்கொள்ளப் பட்டிருக்கிறது.

அடுத்து, காங்கிரஸ் சட்டசபைக் கட்சித் தலைவராக யாரைத் தேர்ந்தெடுப்பது என்பதும் கூட்டத்தில் முடிவானதாகத் தெரியவருகிறது. மீண்டும் ஆகஸ்டு 16-ந்தேதி கூடும் போது, தொடர்ந்த நடவடிக்கைகள் பற்றி விவாதிக்கப்படுமாம்.

வேலையிலிருந்து நீக்கப்பட்ட தொழிலாளர்கள்

மக்கள்சபை முன்பு ஆர்ப்பாட்டம் செய்வர்?

அலகாபாத், ஆக. 13—

தாமோதர் அணைக்கட்டுத் திட்டத்தில் வேலையிலிருந்து நீக்கப் பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க சுமார் 100 தொழிலாளர்கள் அடுத்த வாரத்தில் மக்கள் சபை முன்பு ஆர்ப்பாட்டம் செய்வார்கள் என்று, செய்தி ஒன்று கூறுகிறது.

வழக்கமானதுதான்!

தட்சிணப் பிரதேசம் அமைப்பதற்கான வாய்ப்புகள் உண்டா என்று ஆராய்வது பற்றி முன்னாள் சென்னை அமைச்சர் குட்டி கிருஷ்ணன் நாயர், முதலமைச்சர் காமராசரைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

'தட்சிணப் பிரதேச முயற்சிக்கு இது சாதகமான தருணமல்ல' என்றும், 'அது பற்றிப் பின்னால் பார்த்துக்கொள்ளலாம்' என்றும் காமராசர் கூறியதாகத் தெரிய வருகிறது.

மக்களுக்கு வாழ்வு தந்ததா?

'காந்தியாரின் எண்ணம் ஈடேறிற்று?'

'உலகில் இந்தியரின் அந்தஸ்து உயர்ந்ததா?'

'வெள்ளையரின் கொள்ளையைத் தடுத்ததா?'

'குமரன் குருதி கொட்டியதும்— சிதம்பரம் செக்கிழுத்துச் செத்ததும் ஒரு நேரு உயர்வதற்காகவா?'

சென்னையில் டி. கே. சீனிவாசன் முழக்கம்

"பாரத மாதா'வின் கைகளில் வெள்ளையர் பூட்டியிருக்கும் அடிமை விலங்கு ஒடிக்கப்பட்டுவிட்டால்—பாரதப் புத்திரர்கள் பட்டம் சூட்டிக்கொண்டுவிட்டால், வெள்ளை அதிகாரிகளுக்குக் கொட்டிக் கொடுக்கப்படும் கொள்ளைச் சம்பளம் நிறுத்தப்படும் என்றார்கள் காங்கிரசார்! ஒன்பது ஆண்டுகளாக அவர்கள்தானே ஆட்சியிலிருக்கின்றனர்? ஐ. சி. எஸ். அதிகாரிகளுக்குத் தரப்பட்ட கொள்ளைச் சம்பளம் நிறுத்தப் பட்டதா? வெள்ளையர் மூலதனம் போட்டு நடத்தும் தொழில்களில் கிடைக்கும் கொள்ளை இலாபம் நிறுத்தப்பட்டதா?

"சுதந்திரம் வந்துவிட்டால் இந்த நாட்டு மக்களுக்கு வாழ்வு கிடைக்கும் என்றார்கள், காங்கிரசார்! ஒன்பதாண்டுகள் ஓடி விட்டன; மக்களுக்கு வாழ்வு கிடைத்ததா?

"இந்தியாவுக்கு ஆளும் உரிமை கிடைத்துவிட்டால், உலக நாடுகளில் இந்தியர்களுக்கு அந்தஸ்தும் கிடைக்கும் என்றார்கள், காங்கிரசார்! இந்தியரின் அந்தஸ்து உயர்ந்ததா, இந்த ஒன்பதாண்டுகளில்?"

இவ்வாறு, தோழர் டி. கே. சீனிவாசன் அவர்கள், சென்னைக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் முழக்கமிட்டார்.

தொடர்ந்து அவர் பேசியதாவது:—

"திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் நிற்கப்போகிறது என்ற செய்தி வெளிவந்த நாளிலிருந்து, இந்த மாநிலத்தின் முதன் மந்திரியாகவிருக்கும் காமராசர், நாட்டை ஆளுவதற்குத் தி. மு. கழகத்திடம் இல்லாத சிறப்புகள் யோக்கியதாம்சங்கள் குறித்தும், அவை எல்லாம் காங்கிரசிடம் இருப்பது குறித்தும் இந்தப் பேட்டையில் மட்டுமல்ல— போகிற இடங்களில் எல்லாம் பேசி வருகிறார்.

"காமராசர் இந்த மாநிலத்தின் முதன் மந்திரி. நமது வரிப் பணத்தில்—நாட்டு மக்களின் வரிப் பணத்தில் வாழ்கிற ஒரு பெரிய ஆள்; அவர், மக்கள் அனைவரின் பிரதிநிதியாக இருக்கவேண்டியவர் —மக்களின் வரிப் பணத்தில் வாழ்பவர் என்பதால்! அப்படிப் பட்டவர், போகிற இடங்களில் எல்லாம் தி. மு. கழகத்தைப் பற்றியே பேசிக்கொண்டிருப்பது, எந்த ஜனநாயகத்திற்கு உடன்பாடானதோ தெரியவில்லை?

"நமக்கு நாடாளத் தெரியாது என்கிறாராம், காமராசர்!

"எப்படித் தெரிந்துகொண்டார் காமராசர், நமக்கு நாடாளத் தெரியாதென்பதை? நமக்கு நாடாளத் தெரியாது என்று கூறுபவர் காமராசர் என்பதை நினைக்கும்போது, நமக்குச் சிரிப்புத்தான் வருகிறது.

"நாங்கள் நாடாள வரக்கூடாது —இலாயக்கற்றவர்கள் என்று காமராசர் கூறுவாரானால், நாம் அவருக்குக் கூறவிரும்புகிறோம்— 'இவர்கள் வரி தரவும் இலாயக்கில்லாதவர்கள்' என்று கூறி, நம்மிடமிருந்தெல்லாம் வரி வசூலிக்காமலிருந்துவிடட்டும்.

"நம்மிடமிருந்து வரி வாங்குகிறார்; அவரது சட்டதிட்டங்களுக்கு உட்படுத்தி ஆள்கிறார்; அப்படியிருக்கும்போது, நம்மை நாடாளக்கூடாது என்பதற்கு என்ன நியாயமிருக்க முடியும்?

"வரப்போகும் தேர்தலில், நாம் மட்டுமா கலந்துகொள்ளப் போகிறோம்? கம்யூனிஸ்டுகள், சோஷலிஸ்டுகள், பிரஜா—சோஷலிஸ்டுகள், இன்னும் தனிப்பட்டவர்கள் எல்லாம் தேர்தலில் நிற்கப் போகிறார்கள். அவர்களை எல்லாம் விடுத்துவிட்டு, ஒவ்வொரு கட்சியின் திட்டங்களும், கொள்கைகளும் இன்னின்ன வகைகளால் தீயவை—நாட்டு மக்களுக்கு நன்மை தருவனவல்ல என்று எடுத்துரைக்காமல், தி. மு. கழகத்தை மட்டும் தான் போகிற இடங்களில் எல்லாம் பார்ப்பதும், தி. மு. கழகக் கொடிகளை மட்டும் கண்ணிடுவதுமாக காமராசரிருப்பது, நமக்கு அவர் தரும் பெருமை எனக்கருதிக் கொள்வோம்.

"காமராசர், நமக்கு ஆள்வதற்குரிய தகுதிகள் இருக்கிறதா இல்லையா என்பதைப்பற்றி எல்லாம் பேசுவதாக நினைத்துக் கொண்டு 'இவர்கள், ஆண்டவனை இல்லை என்பவர்கள்; மத நம்பிக்கையற்றவர்கள்'—என்று மக்களிடத்தில் கூறிவருகிறார்.

"நாம் ஏதேனும் பூசாரிவேலைக்கு மனுப்போட்டால்— பாதிரியாகவோ, மௌல்வியாக ஆக வேண்டும் என்று கேட்டிருந்தால், 'இவர்கள் ஆண்டவனைப் பழிப்பவர்கள்; மதநம்பிக்கையற்றவர்கள்', என்று கூறி, 'அந்தப் பூசாரி வேலைகள் இவர்களுக்குத் தரப்படக் கூடாது' என்று இவர் பேசலாம்.

"நாமோ, தேர்தலில் கலந்து கொள்வதாக அறிவித்திருக்கிறோம்; அதற்கும், சட்டசபை நுழைவிற்கும், ஆண்டவனுக்கும் என்ன சம்மந்தம் என்பதுகூட அறியாதவரையா நாம் முதன் மந்திரியாகப் பெற்றிருப்பது?

"கடந்த ஒன்பது ஆண்டுகளில் காங்கிரசார், தேர்தல் நேரத்தைத் தவிர வேறு எப்போது மக்களைப் பற்றி நினைத்திருக்கிறார்கள்? நேரு பண்டிதரில் துவங்கி, இங்கே உள்ள காமராசர்வரை, எந்தக் காரியத்தை கடந்த ஒன்பதாண்டுகளில் மக்களுக்காகச் செய்தார்கள்?

"எகிப்தின் தலைவர் நாசர், சூயஸ் கால்வாயை தேசிய மயமாக்கினார்; 'ஏன்' என்று கேட்டபோது 'மக்களுக்காகச் செய்தேன்' என்றார்.

"சில ஆண்டுகளுக்கு முன்னால் ஈரானில், எண்ணெய்க் கிணறுகள் தேசிய மயமாக்கப்பட்டபோதும், அது மக்களுக்காகச் செய்யப்பட்டதாகவே கூறப்பட்டது.

"பர்மிய சர்க்கார், 'அங்குள்ள இந்தியர்கள் இந்தியாவிற்கு செல்வத்தை எடுத்துச் செல்லக்கூடாது' என்று தடை விதித்தார்கள்;

(4-ம் பக்கம் பார்க்க)

'இலண்டன் மாநாடு முடிவெடுக்கத் தகுதியற்றது'

சூயஸ்மீது தாக்குதல் ஏற்பட்டால்!

அரபு நாடுகளில் 'அழிவு வேலை'கள் நடைபெறுமா?

தொழிற்சங்கங்களின் சம்மேளனத் தீர்மானம்

எகிப்துமீது ஆக்ரமிப்பு நேரிட்டால் அரபு நாடுகளிலுள்ள எல்லா எண்ணெய்க் கம்பெனி தொழிலாளர்களும் எண்ணை உற்பத்தியையும் எண்ணை சுத்திகரிப்பு வேலையையும் நிறுத்திவிட வேண்டுமென்று அரபு நாடுகளின் தொழிற் சங்க சம்மேளனம் தீர்மானித்துள்ளதாம்.

எகிப்துமீது ஆக்ரமிப்பு நடக்காமல் தடுக்க அரபு நாடுகளிலுள்ள விமானத் தளங்கள், இராணுவத் தளங்கள், அன்னிய இராணுவப் பாக்டரிகள் முதலியவைகளை தொழிலாளர்கள் அழித்துவிட வேண்டுமென்றும் வற்புறுத்தி இன்னொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாம்.

மாற்று யோசனை கூறுகிறார் எகிப்தியத் தலைவர் நாசர்!

கெய்ரோ, ஆக. 12—

சூயஸ் கால்வாய் தேசீயமயமாக்கப்பட்டது குறித்து, இலண்டனில் நடைபெறும் மாநாட்டில் எகிப்து கலந்துகொள்ளாதென்றும், அந்த மாநாடு இந்தச் சிக்கல் குறித்து முடிவேதும் எடுக்கத் தகுதி படைத்தது அல்லவென்றும் கர்னல் நாசர் கூறியிருக்கிறார்.

1888-ல், கான்ஸ்டாண்டிநோபின் நகரில் நடைபெற்ற மாநாட்டில் கலந்துகொண்ட சர்க்கார்களடங்கிய ஒரு மாநாடு கூட்டலாம் என்றும் அதற்கு சூயஸ் கால்வாயை இப்போது உபயோகிக்கும் நாடுகளையும் அழைக்கலாம் என்றும் நாசர் யோசனை தெரிவித்தாராம்.

அது போன்றதொரு மாநாடு, கான்ஸ்டாண்டிநோபின் மாநாட்டில் செய்யப்பட்ட முடிவைப் பரிசீலித்து, கால்வாயில் கப்பல் போக்கு-வரத்திற்கு எவ்விதத் தடையும் ஏற்படாத வகையில் ஒரு சர்வதேச ஏற்பாட்டினைச் செய்து கொள்ள முடியும் என்றும் நாசர் கருத்தறிவித்திருக்கிறார்.

அந்த மாநாட்டின் ஒப்பந்தம் ஐ. நா. அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டு அங்கிருந்தே வெளியிடப்படலாம்.

101 மைல் நீளமுள்ள இந்தக் கால்வாய் யுத்த காலத்திலும்சரி— சமாதான காலத்திலும்சரி, போக்குவரத்திற்குத் தங்குதடையின்றி அனுமதிக்கப்பட வேண்டும் என்று, 1888-ம் ஆண்டு கான்ஸ்டாண்டிநோபின் மாநாட்டில் முடிவு எடுக்கப்பட்டது. இந்த மாநாட்டில் பிரிட்டன், ஜெர்மனி, ஆஸ்திரியா, ஹங்கேரி, ஸ்பெயின், பிரான்ஸ், இத்தாலி, நெதர்லண்ட்ஸ், ரஷியா, துருக்கி ஆகிய நாடுகள் கலந்து கொண்டன.

அகமதாபாத் நகரசபைத் தலைவர், துணைத் தலைவர் இராஜிநாமா

இருமொழி பம்பாய் மாநிலத்திற்கு எதிர்ப்பு வலுக்கிறது

அகமதாபாத், ஆக. 11—

இருமொழி பம்பாய் மாநில அமைப்பிற்கு எதிராக அகமதாபாத் நகரசபைத் தலைவர், துணைத் தலைவர் ஆகிய இருவரும் தங்கள் பதவிகளை இராஜிநாமாச் செய்திருக்கின்றனராம்.

மற்றும், நகர சபையின் சார்பில் உள்ள பல்வேறு கமிட்டிகளின் தலைவர்களும், தங்கள் பதவிகளைத் துறக்க விருப்பம் தெரிவித்திருக்கின்றனராம்.

அகமதாபாத் ஆலை முதலாளிகள் சங்கத் தலைவரான ஜெயகிருஷ்ண ஹரிவல்லபதாஸ் என்ற எம். எல். ஏ.-யும் தனது சட்டசபை உறுப்பினர் பதவியைத் துறக்க விரும்புவதாகக் காங்கிரஸ் கட்சித் தலைவருக்கு அறிவித்துவிட்டாராம்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 13—8—'56 திங்கள்

டெல்லிதான் பொறுப்பு!

பன்னிரண்டாம் நூற்றுண்டு இங்கிலாந்தில், காட்டு விலங்குகளை வேட்டையாட மக்களில் எவருக்கும் உரிமை கிடையாதாம்! மன்னன் மட்டுமே வேட்டையாடலாமாம்! காரணம், வேட்டையாடுவதில் விலங்கினங்களைக் கொன்று குவிப்பதினுல் கிடைக்கும் மனநிறைவை—மகிழ்வை, மன்னனைத் தவிர வேறு எவரும் பெறக்கூடாது என்பதுதானும்!

அப்படி அந்தக் காலத்தில் மன்னர்கள் விலங்கினங்களைக் கொன்று குவித்து இன்பம் கண்டதைப் போலத்தான், இந்த இருபதாம் நூற்றுண்டில், இந்தியாவில் ஆட்சிப் பொறுப்பிலேறியிருக்கும் காங்கிரஸ் அகிம்சாமூர்த்திகள் மக்களைச் சுட்டு வீழ்த்தி மனநிறைவு பெற்று வருகின்றனர்போலும்!

கடந்த மூன்று நாட்களாக அகமதாபாத் நகரிலும், குஜராத்தின் இதர பகுதிகளிலும் போலீசாரும் இராணுவத்தினரும் மூர்க்கத்தனமாக மிருகவெறி கொண்டு மக்கள்மீது, உயிர்குடிக்கும் கொடிய அடக்குமுறைகளை ஏவியிருக்கின்றனர். இது குறித்துக் கடந்த சனியன்று எழுதியிருந்தோம்.

அகமதாபாத் சம்பவங்களின்போது போலீசார் நடந்துகொண்ட மனிதாபிமானமற்ற முறையை வன்மையாகக் கண்டிக்கிற நாம், ஆர்ப்பாட்டக்காரர்கள் மேற்கொண்ட வன்முறைச் செயல்களை ஆதரிப்பதாக எவரும் கருதிவிடக்கூடாது.

ஆனுல், கிளர்ந்தெழுந்த மாணவர், இளைஞர்களடங்கிய மக்கள் கூட்டம், பெருத்த ஏமாற்றத்திற்கு ஆளாக்கப்பட்டதின் விளைவாகத்தான் ஆத்திரமடைந்துள்ளனர் என்பதையும் மறந்து விடுவதற்கில்லை.

'பம்பாய் மராட்டியருக்கு இல்லை' என்ற முடிவு, மராட்டியரை எவ்வளவு ஆத்திரமூட்டியதோ அவ்வளவுக்கு, 'இருமொழி பம்பாய் மாநிலம் அமைப்பது' என்ற முடிவும் குஜராத்தியரில் பலரிடையே ஆத்திர உணர்ச்சியைக் கிளப்பியிருக்கிறது.

இதற்கெல்லாம் காரணம் என்ன?

மாநிலப் புது அமைப்பு போன்ற மிகமிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விவகாரத்தில் டில்லிப் பெரிய மனிதர்கள், எல்லோரும் ஒப்புக்கொள்ளக் கூடிய—ஏன், அவர்களே ஒப்புக்கொண்டு பரப்பி வந்த ஒரு நேர்வழிக் கொள்கையைக் கைவிட்டு, குறுகிய பிரதேச ஆசைகளுக்கு நேர்மையைப் பலி கொடுத்துவிட்டு, ஒரு கலப்படமான கொள்கையைக் கடைப்பிடிக்க முயற்சித்ததின் விளைவுதான் 'பம்பாய்', 'அகமதாபாத' எல்லாம்!

'மொழிவழி மாநிலங்கள் அமையவேண்டும்' என்று காலமெல்லாம் மக்களுக்கு எடுத்துக் கூறி, மக்களின் உணர்ச்சியை அவ்வழி உருவாக்கி வந்துவிட்டு, பின்னர் ஆட்சிபீடமேறியதும், 'அவ்வழி அறவழி—நல்வழி—நேர்வழி என்று அன்று கூறினேம்; இன்று அவ்வழி நல்வழி அல்ல; ஒற்றுமைக்கு ஊறுதேடும் வழியாகிறது,' என்று கூறுகிறார்கள். இந்த அநாகரீகப் போக்கு வேறெந்த நாகரீக நாட்டிலும் நடைபெறக்கூடியதல்ல!

'மொழிவழி மாநிலம் வேண்டும்' என்று கூறிவந்தபொழுதும் சரி, இப்போது 'கூடாது' என்று மறுத்துரைத்து, 'இருமொழி, பன்மொழி மாநிலங்கள் வேண்டும்' என்று கூறிடும் நாட்களிலும் சரி, இரண்டு கொள்கைகளின் விளைவுகளையும் காங்கிரசார் மிகைப்படுத்தியே வந்திருக்கின்றனர்.

மொழிவழி மாநில அமைப்பினுல் மட்டுமோ, அல்லது இருமொழி—பன்மொழி மாநில அமைப்பினுல் மட்டுமோ இந்தியாவில் என்றுமே இருந்திராத ஒற்றுமையை உருவாக்கிவிட முடியும் என்று எவரேனும் நம்புவார்களேயானுல், அது, பலிக்காமலேயே போய்விடுகிற பகற்கனவாகும். அதனுல்தான், காங்கிரசின் கண்ணேட்டத்திலிருந்து, விவரமறிந்த மக்கள் விலகிச் செல்ல வேண்டியவர்களாயுள்ளனர்.

'இருமொழி மாநில அமைப்பிற்கு முன்மாதிரியாகும்' என்று வருணிக்கப்பட்ட பீகார்—வங்க இணைப்பு மக்களால் எதிர்த்து முறியடிக்கப்பட்ட பிறகும், தட்சிணப் பிரதேசம் என்ற பேச்சு தமிழ் மக்களால் ஒடுக்கப்பட்ட பிறகும் காங்கிரஸ் மேலிடத்தவரும், மக்கள்சபை உறுப்பினர்களில் பலரும் இருமொழி பம்பாய் மாநில அமைப்பிற்கு ஒருப்பட்டார்கள் என்பது, அவர்கள் மக்களைப் புரிந்து கொண்டிருக்கும் தவருன விதத்தைக் காட்டுவதாயுள்ளது.

'இந்த முடிவு, மக்கள் சபையின் முடிவு என்று கூறப்பட்டாலும், தொடர்புடைய பம்பாய் குஜராத் மக்களும் இதர பகுதியினரில் கூர்த்தமதி படைத்தோரும், என்றே தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் சபை உறுப்பினர்களின் முடிவு இந்த விவகாரத்தைப் பொறுத்து எங்கள் முடிவல்ல' என்றே கூறுவர் என்பது திண்ணம்.

பம்பாய்க்கான புதிய திட்டம் குறித்துப் பேசுகையில் என். வி. காட்கில், 'மராட்டியருக்கு இழைக்கப்பட்ட அநீதி இந்த புதிய ஏற்பாட்டினுல் துடைக்கப்பட்டதாகி விடாது; இனி இன்றைக்கில்லாவிடினும் என்றைக்காயினும், ஜனநாயகபூர்வமாக இந்த முடிவு மாற்றப்படும்வரை நான் பொறுத்திருப்பேன்' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

அப்படியானுல், மராட்டியருக்கு இழைக்கப்பட்ட அநீதியும் துடைக்கப்படாமல், குஜராத்தியரின் ஒருமொழி மாநில விருப்பமும் நிறைவேருமல் இப்போது செய்யப்பட்டிருக்கிற முடிவு, புரையோடிப்போன புண்ணுக்குப் புனுகு பூசுவதைப் போன்றதேயாகும் என்பது தெளிவு!

இந்த நிலையிலும், பம்பாய் சம்பவங்களுக்குப் பொறுப்பானதைப் போலவே அகமதாபாத் சம்பவங்களுக்கும் டெல்லிதான் பொறுப்பேற்க வேண்டும்.

இலங்கைத் தமிழர் உரிமைப் போர்

பெடரல் கட்சி மாநாடு நோக்கி தோழர்கள் கால்நடைப் பயணம்

கொழும்பு, ஆக. 12—

இலங்கையில், சிங்களத்தை மட்டுமே ஆட்சிமொழியாக்குவது என்ற சர்க்காரின் வெறிப்போக்கை எதிர்த்து பெடரல் கட்சியினர் பெரும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தத் திட்டமிட்டிருக்கின்றனர்.

கட்சியின் மாநாடு வரும் ஆகஸ்டு 17, 18 தேதிகளில் திரிகோணமலையில் நடைபெறுவதையொட்டி, இலங்கைத் தமிழ்ப் பகுதிகள் பலவற்றிலுமிருந்தும் கட்சி ஆதரவாளர்களும், கட்சித் தோழர்களும் சாரை சாரையாகத் திரிகோணமலை நோக்கிப் புறப்பட்டுச் சென்று கொண்டிருக்கின்றனராம்.

கால்நடையாகவே திரிகோணமலைக்குச் செல்லும் இந்த வீரர் கூட்டத்திற்கு ஆங்காங்கே உள்ள கட்சித் தோழர்கள் உணவு முதலிய வசதிகளை அளிப்பர் என்றும் தெரியவருகிறது.

கட்சியின் இந்த ஆண்டு மாநாட்டில் வழக்கத்திற்கு மாருக மாற்றம் எதும் இல்லை என்றும், நாட்டில் நிலவும் அரசியல் சூழ்நிலைகளுக்கு ஒப்ப கட்சித் தோழர்களில் பலர் கால் நடையாக மாநாட்டிற்கு வருகின்றனர் — அவ்வளவுதான் என்றும் கட்சித் தலைவரான செல்வநாயகம் அறிவித்திருக்கிறார்.

பெடரல் கட்சியினர் இப்படி மாநாடு கூட்டி, பெரும் ஆர்ப்பாட்டத்திற்குத் தயாராகும்போது, வேறு சில தமிழ்த் தலைவர்கள் இந்த நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள மறுத்திருக்கின்றனராம்.

தமிழ் காங்கிரஸ் தலைவர் பொன்னம்பலம், 'இந்த மாநாடும் ஆர்ப்பாட்டமும் கட்சி வேறுபாடின்றி நடைபெற வேண்டும்; தமிழர்கள் எல்லோரும் கலந்துகொள்ளும் வகையில் அமைந்திருக்க வேண்டும்; அப்போது—தமிழர்கள், தமிழர் தேசிய மாநாடு ஒன்றில் கலந்துகொள்ளும்போது சிங்களவரால் தாக்கப்பட்டால், தாக்குதலின்போது, பெடரல் கட்சியினர் — அல்லாதவர் என்று வேறுபாடு காட்டப்படமாட்டாது அல்லவா?' என்று கேட்டிருக்கிறாராம்.

இதற்கிடையில், திரிசிங்கள ஞுங்க பெருமுனு என்ற சிங்கள மொழி வெறி இயக்கத்தவர், தமிழர் மாநாடு நடைபெறும் நாட்களிலேயே எதிர் ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் நடத்த முயற்சிப்பதாகவும், இந்த முயற்சியை சர்க்கார் தடுத்திருக்கிறது என்றும் கூறப்படுகிறது.

தொழிற்சாலைகள் நிறுவும் திட்டம்

நிதி அமைச்சர் விளக்கம்

சென்னை மாகாணத்தில் தொழிற்சாலைகள் நிறுவும் திட்டம் குறித்தும், அதை நிறைவேற்றுவதற்கான பண வசதி குறித்தும் சென்னை நிதி அமைச்சர் சுப்பிரமணியம், பாங்கி உரிமையாளர்கள் தொழிலதிபர்கள், வர்த்தகர்களடங்கிய கூட்டத்தில் விளக்குகையில், சேலம் அருகே சுமார் ரூ. 8 கோடி செலவில் அலுமினியத் தொழிற்சாலை நிறுவும் திட்டம் பற்றி குறிப்பிடுகையில் கூறியதாவது:—

"சேலம் மாவட்டத்தில் கிடைக்கும் 'பாக்செட்' அலுமினியத் தாதுப் பொருள் உலகிலேயே சிறந்தது என்று இத்தாலிய நிபுணர்கள் கூறியிருக்கிறார்கள்; இதோடு மேற்கொண்டு பரிசோதனை நடத்துவதற்காக, ஒரு டன் 'பாக்ஸைட்' அலுமினியத் தாதுப் பொருள் வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது."

"சென்னை மாகாணத்தில் மேட்டுப்பாளையம் அருகில் காகிதத் தொழிற்சாலையை தனிப்பட்டோர் நிறுவ அனுமதியளிக்கும் உத்தேசமும் இருக்கிறது."

"நெய்வேலி நிலக்கரி சுரங்கத் திட்டம் ஒருபுறமிருக்க, சென்னை மாகாணத்தில் உடனடியாக மேற்கொள்ளப்படவிருக்கும் புதிய தொழில் திட்டங்களில் சில இவையாகும்."

இரயில் பெட்டித் தொழிற்சாலை அபிவிருத்தி

ரூ. 3 கோடி செலவில் திட்டம்

புதுடில்லி, ஆக. 10—

பெரம்பூர் இரயில் பெட்டித் தொழிற்சாலையை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் ஒரு பகுதியாக இரயில் பெட்டிக்குத் தேவையான பெஞ்சுகள் முதலியன தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை சென்னையில் நிறுவ இரயில்வே இலாகா திட்டமிட்டிருக்கிறதாம்.

ரூ. 3 கோடி செலவில் இத்தொழிற்சாலையை அயனுவரத்தில் அமைப்பது உத்தேசம் என்றும், இதில் சுமார் 3,000 பேருக்கு வேலை கிடைக்கும் என்றும் கூறப்படுகிறது.

'மிகக் குறைவானது' எனக் கருதுகிறாம்!

திட்டக் குழுவை சென்னை அரசாங்கம் வற்புறுத்த வேண்டுமாம்!

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சென்னை மாகாணத்திற்கு ரூ. 179 கோடி ஒதுக்கப்பட்டிருப்பது மிகவும் குறைவானது என்று கருதுகிறேன். சென்னை மாகாணத்திற்கு மேலும் பணம் ஒதுக்கப்பட திட்டக் குழுவை சென்னை அரசாங்கம் வற்புறுத்த வேண்டும். இந்த நோக்கத்துடன் இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டத்தின் முதல் ஆண்டில் மூலதனச் செலவுக்குரூ.37கோடி ஒதுக்கியிருக்கிறேன். சென்னையின் திட்டங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான பணத்திற்கு, மத்திய அரசாங்க மானியத்துடன் சென்னை அரசாங்கமே வழி செய்யும்; எல்லா மூலதனச் செலவையும் சமாளிக்க இயலும்" என்று நிதி அமைச்சர் சுப்பிரமணியம் பாங்கி உரிமையாளர்கள், தொழிலதிபர்கள் கூட்டத்தில் பேசுகையில் நம்பிக்கை தெரிவித்தார்.

செங்கோட்டைப் பகுதிகள்

பிரிவினையின்போது சென்னை அதிகாரிகள் கோட்டைவிட்டனர்!

மக்கள் சபை உறுப்பினர்கள் கவலைப்படுகின்றனராம்!

புதுடில்லி, ஆக 12—

செங்கோட்டைத் தாலுகாவை கூறு போட்டிருக்கும் விதம் குறித்து சென்னை மாநிலத்திலிருந்து சென்றுள்ள மக்கள்சபை உறுப்பினர்கள் மனக் கசப்படைந்துள்ளனராம்.

சென்னை—திரு-கொச்சி சர்க்கார்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள இப்போதைய ஒப்பந்தப்படி 'புளியரா மலைப்பகுதி திரு-கொச்சியிலேயே இருக்க வேண்டும்' என்று முடிவாகியிருக்கிறது.

இப்போது, புளியரா கிராமத்தைச் சேர்ந்த பகுதிகள் மட்டுமின்றி செங்கோட்டை, அச்சம்பத்தூர் கிராமப் பகுதிகளும் புளியரா பகுதிகளுடன் ஒன்று சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கின்றனவாம்.

சென்னை உறுப்பினர்கள், இப்போது திரு-கொச்சி சர்க்கார் செங்கோட்டை பற்றிய தங்களின் அறிக்கையை ரத்து செய்துவிட வேண்டும் என்றும், செங்கோட்டைக்கு மீண்டும் இரு மாநில சர்க்கார் அதிகாரிகளும் சென்று புதிதாக எல்லைகளை வகுக்கவேண்டும் என்றும் கருதுகின்றனராம்.

சென்னை முதன் மந்திரி காமராசர், உள்நாட்டு மந்திரி பண்டித பந்திற்கு இது குறித்து கடிதம் எழுதியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

மாநிலப் புது அமைப்பு மசோதாவிற்கு, மாநிலங்கள் சபையில் இது குறித்து திருத்தம் கொண்டு வரவும் ஏற்பாடாகி வருகிறதாம்.

பூமியின் பருவ நிலை மாறிக்கொண்டே வருகிறதா?

வெப்பம் அதிகரிப்புக்குக் காரணம் என்ன?

பூமியின் பருவ நிலை மாறிக்கொண்டே வருகிறதென்று சில ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்திருக்கிறார்கள்; 1900-க்குப் பிறகு பூமி வர வர அதிக வெப்பமடைந்து வருகிறது. சென்ற ஐம்பது வருஷ காலத்தில் 2·2 பாரன்ஹீட் டிகிரி வெப்பம் அதிகரித்திருக்கிறது.

வெப்பம் அதிகரிப்பின் காரணம் இன்னதென்று நிச்சயமாய்ப் புலப்படவில்லை; பூமியைச் சுற்றியுள்ள வாயு மண்டலத்தில் 'கார்பன் டையாக்சைட்' அதிகமாகக் காணப்படுவதுதான் காரணமென்று கூறப்படுகிறது.

மனிதன், கோடிக்கணக்கான டன் நிலக்கரியை ஆண்டுதோறும் எரித்து வருவதால் 'கார்பன் டையாக்ஸைட்' வாயு வளிமண்டலத்தில் சேர்ந்துவிட்டிருக்கிறதென்று தோன்றுகிறது.

நாட்டுக் காய்கறிகளில் வைட்டமின்சத்துக்கள்

மக்களுக்குப் பலன்தரும் ஆராய்ச்சி விளக்கம்

மருத்துவத்துறையில் உள்நாட்டுக் காய்கறிகளிலும், பழங்களிலும் வைட்டமின் சத்துக்கள் எந்த அளவுக்கு இருக்கின்றன என்பது பற்றி ஆராய்ச்சி நடத்தப்பட்டிருக்கிறது.

வைட்டமின் 'பி', வைட்டமின் 'கே' முதலிய இரு முக்கிய சத்துக்களும், இரும்பு—கால்சியம்—பாஸ்பரஸ் ஆகியவைகளும், வெந்தயக் கீரை, புதினு கீரை, அரைக் கீரை, பசலைக் கீரை, சோயா கீரை, கடுகுக் கீரை, போயா கீரை, பத்துவா கீரை முதலியனவற்றில் இருப்பதாகத் தெரியவந்திருக்கிறது.

கொத்தமல்லிக் கீரை, கத்திரிக்காய், வெங்காயம், சர்க்கரை வள்ளிக் கிழங்கு, பட்டாணி, கோஸ் கீரை, காலி ப்ளவர், லெட்யூஸ், நெல்லிக்காய், ஆப்பிள் முதலியவைகளில்கூட வைட்டமின் சத்துக்கள் இருக்கின்றன என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

வைட்டமின் 'பி' இருதயத்துக்கு மிக நல்லதென்று தெரியவந்திருக்கிறது; இரத்த அழுத்தத்தை அது கட்டுப்படுத்தும்; நுண்ணிய நாளங்கள் பாதிக்கப்படுவதை அது தடுக்கும்; எனவே, இந்த ஆராய்ச்சி மக்களுக்கு மிகவும் முக்கியமானது.

ஆசிரியருக்குக் கடிதம்

தேசீயமா? — ஜாதீயமா?

ஐயா,

வருகிற செப்டம்பர் திங்கள் 1-ந் தேதிக்கு முன்னரே, இந்திய ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷனைத் துவக்குவதற்கான ஏற்பாடுகள் மிக மும்முரமாக நடைபெறுகின்றன. மத்திய, வட்டார நிலையங்களுக்கான அதிகாரிகள் எல்லாரையும் தேர்ந்தெடுத்தாய் விட்டது என்றும் தெரிகிறது.

தென்னகத்தைத் தவிர மற்றப் பகுதிகளில் அதிகாரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டது குறித்து நமக்கு இப்போது கவலையில்லை. வட்டார மானேசர், அந்த வட்டார அதிகாரத்திற்குட்பட்ட எல்லைக்கு அப்பாலுள்ள பகுதிகளிலிருந்து தருவிக்கப்படுவார் என்று அறியவருகிறது. அந்தந்த வட்டாரத்திற்குள்ளேயே இந்தப் பதவிக்குத் தகுதி பெற்ற அதிகாரிகள் கிடைக்கவில்லையா என்று கேட்டு ஆச்சரியப்படலாம். இதுபோலவே, மற்ற அதிகாரிகளைத் தேர்ந்தெடுப்பதிலும், அவ்வதிகாரிகள் எந்தெந்த அடிப்படையில்—முறையில் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர் என்பதும் தெரியவில்லை.

கிளை மானேஜராக இருந்த ஒருவர், இப்போது வட்டார மானேஜராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்று அறிகிறோம். அவருக்கிருக்கிற ஒரே தகுதியெல்லாம், அவருடைய சொந்த சகோதரர் ஒருவர் ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷனைப்புதுப்பிப்பதில் ஒரு முக்கியமான இடம் பெற்றிருக்கிறார் என்பது மட்டுந்தான்.

அந்தக் கார்ப்பொரேஷனுக்கான முக்கியப் பொறுப்புகளில் நியமிப்பதற்கென அமைச்சர், நாடு முழுமையும் சுற்றி, ஆங்காங்கு அதிகாரிகளைச் சந்தித்து பேட்டி கண்டிருக்கிறார். ஆனால், அமைச்சர் அந்தந்த இடங்களிலுள்ள தலைமைக் காரியாலயங்களில் அதிகாரிகளைச் சந்தித்துப் பேசாமலேயே ஒருவர் டிவிஷனல் மானேஜராக நியமிக்கப் பட்டிருக்கிறார் என்பது உண்மையானால், அது மிகவும் ஆச்சரியப் படத்தக்க ஒன்றேயாகும்.

தன்னுடைய சொந்தக் கூட்டுத் தோழர்களிடையேயுள்ள பல உயர்தர—மேற்பட்ட வர்களுக்கும் மேலதிகாரியாக திடீரென இவர் அதிகார உயர்வு பெற்றிருப்பதானது ஒவ்வொருவருடைய சந்தேகத்தையும் கிளப்புகிறது. இந்த விவரங்கள் அனைத்தும் உண்மையாயிருக்குமானால், வட்டார மானேஜரிலிருந்து டிவிஷனல் மானேஜர் பதவி வரைக்குமுள்ள எல்லா பணிகளிலும் ஒரு குறிப்பிட்ட வகுப்பார் — பிராமணர்களின் ஆதிக்கமே நிலவிவருவதைக் கண்டுபிடிக்கலாம்.

எல்லாவித தீய செயல்களுக்கும் அப்பாற்பட்ட நல்ல ஒரு 'தேசீயம்' ஏற்படும் என்றுதான் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், இப்போதைய சர்க்கார் தன்னுடைய நிறுவனங்களில் உள்ள முக்கியத்துவம் வாய்ந்த பதவிகளை நிரப்புவதில் மேற்கொண்டுவரும் நடைமுறைகளை ஆராய்ந்து பார்த்தால், எல்லா அலுவலகங்களையும் தங்கள் ஆதிக்கத்தின்கீழ் கொண்டு வரவேண்டுமென்று விரும்புகிற ஒரு குறிப்பிட்ட வகுப்பாரிடம் 'தேசீயம்' சிக்கிவிட்டதோ என்று ஐயுறும்படி இருக்கிறது.

தகுதி, அனுபவம் போன்றவைகளையெல்லாம் கவனிக்காமல், அதிகாரிகளை, செல்வாக்கையோ, உறவுமுறையையோ அடிப்படையாகக் கொண்டு நியமிப்பதாயிருந்தால், அந்த கார்ப்பரேஷன், என்றைக்குத் துவக்கப்படுகிறதோ, அந்த நாளிலேயே அது தன் முறிக்கோளில் தோற்றுவிடுகிறது.

அதிகாரிகளை நியமனம் செய்யும் அதிகாரம் பெற்றோர், சர்க்காருடைய உதவி தங்களுக்கு இருக்கிறது என்பதால், அதிகாரிகளை நியமிப்பதில் தகுதியையோ திறமையையோ கவனிக்காமல் இம்மாதிரி தவறான முறையில் நடந்துகொள்கிறார்கள்.

முந்தின நாட்களில் இவ்விதமான ஒழுங்கீன நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தவர்கள் தான் இப்போது, இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷனின் 'தலைவிதி'யை உருவாக்கும் பொறுப்பிலிருக்கிறார்கள். குறிப்பாக, நவீன காலத்திற்குத் தக்கவாறு தங்களை மாற்றிக் கொள்வதில் அவர்கள் மிகத் தீவிர மனப்பான்மை கொண்டவர்களாக இருக்கின்றனர்.

இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷனின் முக்கியமான அலுவலர்களை நியமிக்கும் வேலை முடிவதற்கு முன்னர், அங்கு இன்ஷ்யூர் செய்து கொள்ளுகின்ற பெரும்பான்மையான பார்ப்பனரல்லாத பொதுமக்களுடையவும் மட்டுமின்றி, கார்ப்பொரேஷன் ஊழியர்களுடையவும் பயத்தைப் போக்கி, சர்க்கார், இந்த அதிகாரிகள் நியமனத்தை மீண்டும் மாற்றியமைக்க தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

"உண்மை விளம்பி"

★

போலீசு நிர்வாகத்தின் போக்கு!

ஐயா,

சென்னை நகரின் நடைபாதைகளில் நின்றுகொண்டும், நடந்தும் ஏதோ தங்களால் இயன்ற சாதாரண பொருள்களை (சீப்பு, பேனா, ரிப்பன், ஊசி மற்றும் பழங்கள்) வியாபாரம் செய்து அன்றாட வயிற்றுப் பிரச்சினையைத் தீர்த்துக் கொண்டு, தங்களை நம்பியிருக்கும் மற்ற உயிர்களையும் ஓரளவு காப்பாற்றிக்கொண்டு உயிர் வாழ்ந்து வரும் எண்ணற்றவர்களை யாவரும் அறிவர். அவர்களால் யாருக்கும் எவ்விதத் தொல்லையும் ஏற்பட்டது என்றோ, இனி ஏற்படும் என்றோ யாரும் கூறவில்லை—கூறமுடியாது. அப்படியிருந்தும், இப்போது போலீசு நிர்வாகத்தினரால், மேற்சொன்ன நடைபாதை வியாபாரிகளுக்கு-குறிப்பாக சீனத்துக் கடைத் தெரு (சைனா பசார்) பூக்கடை, ரட்டன் பசார், உயர் நீதி மன்ற எதிர்ப் பாட்டை, பாரிமுனை முதலான பகுதிகளில் நின்று யாருக்கும் எவ்வித இடையூறும் செய்யாமல் தங்கள் தகுதிக்கு இயன்ற சிறு சிறு பொருள்களை விற்று வாழ்ந்துவருபவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் இன்னல்களை எழுத ஏடு இடந்தராது.

ஆயினும் பொதுமக்களுடையவும், உயர்தர அதிகாரிகளுடையவும் பார்வைக்கு வரவேண்டும் என்ற எண்ணத்தினாலும், மனவேதனை எல்லையைத் தாண்டிவிட்ட காரணத்தாலும் இதை எழுத நேர்ந்தது.

இதற்கு முன்பும் இதுபற்றிய ஒரு கடிதம் 'நம் நாடு' இதழிலும் மற்ற சில நாளிதழ்களிலும் வந்திருக்கின்றன.

இதற்குமுன் மேற்சொன்ன வியாபாரிகளை போலீசார் பிடிப்பதும், குற்றம் பதிவு செய்வதும், அபராதம் விதிப்பதும் தான் இருந்துவந்த நடைமுறை. ஆனால் இப்போது, விற்பவர்களைப் பிடித்துக் கொண்டு போவதும், சரக்கு முழுவதையும் பிடுங்கிக் கொள்வதும், எவ்வளவு சிறு பையன்களாக இருந்தாலும் வரையறையின்றிக் காவலில் வைப்பதும், கண்டபடி ஏசுவதும் பாமர மக்கள்கூடச் சொல்ல அஞ்சும் இழிவான 'சாக்கடை மொழி'களை அர்ச்சிப்பதும், பிரம்பு ஒடியும்வரை அடிப்பதும் எல்லை மீறிவிட்டது.

இதன் முடிவு, இந்த நாட்டை ஆளும் அரசினருக்கும் அவர்களின் முக்கிய அங்கமாக இயங்கும் போலீசு நிர்வாகத்தினருக்கும் நன்மை பயப்பது அல்ல; நிலைமை அந்த அளவு விபரீத கட்டத்தை அடைந்துவிட்டது. இதைக் கண்ணுறும் சம்மந்தப்பட்ட அதிகாரிகளும், அவர்களுக்குக் கீழுள்ள உபஅதிகாரிகளும் இதைப்பற்றி உடனே கவனிப்பது எல்லாவகையிலும் நன்மையாக முடியும் என்பதை வற்புறுத்திக் கூறுகிறேன்.

ஒரு 'நடைபாதை வாழ்வோன்'
சென்னை—1.

குடும்பக் கட்டுப்பாடு

சட்டசபையில் 'தமாஷ்'

சென்னை, ஆக. 10—

"குடும்பக் கட்டுப்பாடு குறித்து பிரச்சாரம் செய்வதற்கு மணமாகாத பெண்கள்தான் தேர்ந்தெடுக்கப்படுகின்றனரா? அவர்களது ஆலோசனைகள் குறித்து கிராமப் பெண்கள் என்ன நினைக்கின்றனர்?" என்று சிரிப்பிற்கிடையே ஒரு உறுப்பினர், சென்னை சட்டசபையில் கேள்வி ஒன்று எழுப்பியிருக்கிறார்.

இதற்கு மந்திரி பதிலளிக்கும் போது, 'மணமாகாதவர்களைப் பற்றியும், வயதான பெண்களைப் பற்றியும் உறுப்பினர் நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறாரே?' என்று கூறி, மேலும் உறுப்பினர்களைச் சிரிக்கவைத்தாராம்!

"இந்தப் பிரச்சாரத்திற்கு விதவைகள் தகுந்தவர்கள் அல்லவா?" என்று வேறொரு உறுப்பினர் கேட்டபோதும் சிரிப்பு எழுந்ததாம்!

'விதவைகளின் மனோதத்துவ நிலை எனக்குத் தெரியாது; ஒருவேளை உறுப்பினருக்குத் தெரியும் போலும்!" என்று மந்திரி வெட்டி பதில் கூறினாராம்!

குடும்பக் கட்டுப்பாடுத் திட்டங்களுக்காக இரண்டாம் திட்டத்தில் ரூ. 4 கோடி செலவிட டில்லி சர்க்கார் உத்தேசித்திருப்பதாயும் இதில் மாநிலங்களுக்குக் கிடைக்கும் பங்கினைக்கொண்டு மாநில சர்க்கார் திட்டம் தீட்டப் போவதாயும் அவர் கூறினாராம்.

நடவடிக்கை எடுத்திருக்கிறார்களாம்

விலைவாசி ஏற்றம் குறித்து மந்திரியின் பதில்

சென்னை, ஆக 9—

அரிசி, மற்றும் உணவுப் பொருள்களின் விலை ஏகமாக ஏறிக்கொண்டிருப்பதைக் குறித்து சென்னை சட்டசபையில் கேட்கப்பட்ட சரமாரியான கேள்விகளுக்கு பதிலளிக்கும்போது மந்திரி பக்தவத்சலம், 'விலைவாசி ஏற்றங்களைத் தடுக்க சர்க்கார் தகுந்த நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்; மக்கள் விரும்பாத 'கண்ட்ரோலை'க் கொண்டு வராமல், தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது; பதுக்கலைத் தடுக்கவும் சர்க்கார் தகுந்த நடவடிக்கை எடுத்து வருகின்றனர்' என்று குறிப்பிட்டுள்ளார்.

புதிய பம்பாய் மாநிலம்

பலவகைகளில் பெரிதாக இருக்குமாம்!

பம்பாய், ஆக. 9—

இருமொழி மாநிலமாக அமையும் பம்பாய், உத்தரப்பிரதேசத்தை விட சிறியதாக இருந்தபோதிலும், பலவகையிலும் வேறு மாநிலங்களைவிடப் பெரியதாக அமையுமாம்.

1,88,240 சதுர மைல் பரப்புக் கொண்ட மிகப் பெரியதாக அமையும் இந்த பம்பாயின் வருமானம், ரூ. 100 கோடியாக இருக்குமாம். பெரிய மாநிலமான உ. பி. - யின் வருமானமே ரூ. 78 - கோடிதானாம்.

இங்குதான் அதிகமான வானொலி நிலையங்களாம்—5!

7 பல்கலைக் கழகங்கள் உள்ளனவாம்!

அதிகமான சினிமாப் படப் பிடிப்புச் சாலைகள் இங்குதான் இருக்கின்றனவாம்!

புதிய மாநிலத்தின் சட்ட சபையில் 396 உறுப்பினர்கள் இருப்பர்; மேல் சபை 72 பேர் கொண்டதாகுமாம்.

டில்லி மக்கள் சபையில் பம்பாய்க்கு 66 இடங்களும், மாநிலங்கள்சபையில் 27 இடங்களும் உண்டாம்; ஆனால் உ. பி. - க்கு மக்கள் சபையில் 86 இடங்களும், மாநிலங்கள் சபையில் 31 இடங்களும் உண்டு.

மாநிலங்கள் சபையில் மொத்தம் 220 உறுப்பினர்கள்; இவர்களில் 208 பேர் மாநிலங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுவர்.

எஞ்சினீயரிங் கல்லூரிக்கு இடம்

பரிசீலனை செய்யப்படுகிறதாம்

சென்னையில் கிறவ எண்ணிப்புள்ள உயர்தர தொழில் நுணுக்கக் கல்வி எஞ்சினீயரிங் கழகத்திற்கான இடவசதி செய்து தருவதுபற்றியும், கவர்னர் மாளிகைக்குச் சொந்தமான 1,200 ஏகர் நிலத்தை இதற்காக ஒதுக்கலாமா என்பது பற்றியும் பரிசீலனை செய்யப்படுவதாகக் கல்வி மந்திரி, சட்டசபையில் தெரிவித்திருக்கிறார்.

உதகையில் நடைபெற்ற

சர்க்கார் அலுவல்கள்

செலவு விபரங்களைக் கூற மந்திரி மறுப்பு

சென்னை, ஆக. 10—

'கடந்த கோடைப் பருவத்தில் உதகமண்டலத்தில் பல கமிட்டிகள், மகாநாடுகள் நடந்தபடியால் தொடர்புடைய இலாகா மந்திரிகள், அதிகாரிகள் எல்லாம் உதகையில் 10 நாட்கள் வரை தங்கியிருந்தனர்' என்று மந்திரி தெரிவித்திருக்கிறார்.

'இதற்கான செலவு விவரங்களைச் சேகரிக்க ஆகும் காலமும், செலவும் பொதுமக்கள் நலனுக்கு உகந்ததாக' இல்லை என்று சட்டசபையில், நிதி மந்திரி கூறினாராம்.

வெல்ல விற்பனைக்கு வருமான வரி விலக்கு

உயர்நீதி மன்றத் தீர்ப்பு

தம்முடைய சொந்த நிலத்தில் சாகுபடி செய்யப்பட்ட கரும்பிலிருந்து தயாரிக்கப்படும் வெல்ல விற்பனைக்கு வருமான வரி விலக்கு உண்டு' என்று பம்பாய் உயர்நீதி மன்றப் பிரதம நீதிபதி, வருமான வரி வழக்கொன்றில் தீர்ப்பு கூறியுள்ளார்.

கள்ள நட்புக் கொள்ளும்

மனைவிக்குத் தண்டனை

மக்கள் சபையில் மசோதா நிராகரிப்பு

புதுடில்லி, ஆக. 10—

"மணமான பெண் ஒருத்தி கணவனுக்குத் துரோகம் இழைத்து விட்டு வேறொரு கள்ளக்காதலனோடு தொடர்புகொண்டால், அவனோடு தொடர்புகொள்ளும் ஆணை மட்டுமின்றி அப்படித் தொடர்புகொள்ளும் பெண்ணையும் தண்டிக்கவேண்டும்" என்று, புல்சிங் என்பார் மக்கள் சபையில் தாக்கல் செய்த மசோதா நிராகரிக்கப்பட்டிருக்கிறது.

"பெண்களின் சமூகநிலை இன்று தேவையான அளவு முன்னேற்றமடையாததால், இப்போதுள்ள (ஆண்களை மட்டும் தண்டிக்கும்) சட்டத்தை மாற்ற இன்னும் காலம் வரவில்லை" என்று மந்திரி தத்தார் கூறினார்.

"ஒருவருக்கொருவர் சம்மதத்துடன் ஏற்படும் இந்த நட்பு சம்பந்தமான சட்டத்தையே நீக்கிவிட வேண்டும் என்றும், அது போன்ற கள்ள நட்பு ஏற்படாதவாறு சமூகம்தான் திருத்தவேண்டும் என்றும் ஒரு கருத்து இருந்துவருகிறது; இந்த நிலையில் இப்போதுள்ள சட்டத்தை மாற்றவேண்டியதில்லை" என்றும் மந்திரி விளக்கம் கூறியிருக்கிறார்.

ஓடிவரும் அகதிகளின் எண்ணிக்கை

நாளுக்குநாள் ஆயிரக்கணக்கில் அதிகரிக்கிறதாம்

சர்க்காருக்குக் கவலை தருவதாகத் தகவல்

கல்கத்தா, ஆக. 9—

கிழக்கு பாகிஸ்தானிலிருந்து அகதிகளாக ஓடிவருவோரின் தொகை நாளுக்குநாள் அதிகரித்து வருவதாகத் தெரியவருகிறது.

கடந்த ஜூன் திங்களில் ஓடிவந்தோரின் தொகை 24,734 என்றும், இது, ஜூலைத்திங்களில் 27,412 ஆக உயர்ந்துள்ளது என்றும் சர்க்கார் கூறுகிறது.

கடந்த மே திங்களில் டாக்காவில் நடைபெற்ற இந்தோ—பாகிஸ்தான் மாநாட்டில் எதிர்பார்க்கப்பட்டதற்கு மாறாக ஓடிவரும் அகதிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் நூற்றுக்கணக்கில் அதிகரித்துக் கொண்டிருப்பது சர்க்காருக்குக் கவலை தருகிறதாம்.

இந்த ஆண்டு ஏப்ரல் திங்களில் 18,040 பேர்களும், மே திங்களில் 24,657 பேர்களும் அகதிகளாக ஓடிவந்தனராம்.

இப்படி பல்லாயிரக் கணக்கில் ஓடிவருவோர்களை எல்லாம் வரவேற்று வாழ்வளிப்பதற்காக டில்லி சர்க்கார் கோடிக்கணக்கில் பணம் செலவிட்டுக் கொண்டிருக்கிறது.

ஒரு தொழிலுக்கு ஒரே தொழிற் சங்கம்

சட்டம் இயற்றுவது பற்றி சர்க்கார் பரிசீலிக்கிறதாம்

சென்னை மேல் சபையில், கேள்வி ஒன்றுக்குத் தொழில் இலாகா அமைச்சர் பக்தவத்சலம் பதிலளிக்கையில், ஒரு தொழிலுக்கு அல்லது தொழிற்சாலைக்கு ஒரே தொழிலாளர் சங்கம் ஏற்படுத்துவதற்கான சட்டம் இயற்றுவது சம்பந்தமான பிரச்சினையை சர்க்கார் பரிசீலனை செய்து கொண்டிருப்பதாகக் கூறியுள்ளார்.

மற்றொரு கேள்விக்கு அவர் பதிலளிக்கையில், சுக நல அதிகாரியிடம் அதிருப்தி ஏதேனுமிருந்தால் அதைச் சர்க்காரிடம் தொழிலாளர்கள் தெரிவிக்கலாமென்றும், அதிகாரத்தை பயனற்ற முறையில் அதிகாரி அமுல் செய்தால் சர்க்கார் தக்க நடவடிக்கை எடுக்குமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

பல்லாயிரம் பேர் கலந்துகொண்ட மக்கள் மன்றக் கூட்டம்

சென்னை-பெத்துநாய்க்கன்பேட்டையில் மு. கருணாநிதி—டி. கே. சீனிவாசன்

சென்னை, ஆக. 13—

சென்னை பெத்துநாய்க்கன் பேட்டை மக்கள் மன்றத்தின் சார்பில், காசி விசுவநாதர் கோயில் திடலில், கடந்த சனிக்கிழமை அன்று மாலை ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டம் துவங்குமுன், அண்ணா அவர்கள் எழுதிய 'பெரிய மனிதர்கள்' என்ற நாடகத்தினைத் தோழர்கள் அரு. பாண்டியன், டி. கே. விலாசன், பண்மொழியன், இராதா மனோவன் ஆகியோர் வேடங்கள் போட்டுக்கொள்ளாமல், உரையாடல் நாடகமாகச் சிறப்புற நடித்தனர்.

கூட்டம் சுமார் 7 மணியளவில் துவங்கிற்று. கூட்டத்திற்கு தோழர் விசுவநாதன் தலைமை தாங்கி சுருக்கமானதோர் உரை நிகழ்த்தினார்.

பின்னர், தோழர் சி. ஆர் பாலசுந்தரம் அவர்கள், அரசியல் நிலை குறித்து சிறிது நேரம் பேசிய பின், தோழர் டி. கே. சீனிவாசன் அவர்கள் மிகச் சிறப்பானதோர் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

இறுதியாக தோழர் மு. கருணாநிதி அவர்கள் உணர்ச்சி மிக்கதோர் உரை நிகழ்த்தினார்.

தோழர் டி. கே. சீனிவாசன், மு கருணாநிதி ஆகியோருக்கு மக்கள் மன்றத்தின் சார்பிலும், இதர பல்வேறு மன்றங்களின் சார்பிலும், கைத்தறித் துணிகள் அணிவிக்கப் பட்டன.

கூட்டத்தில், துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன், தோழர்கள் ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ., செழியன், எஸ். வேதரத்தினம், ஆவுடையப்பன் ஆகியோரும், ஏராளமான தாய்மார் உட்பட பல்லாயிரக்கணக்கான மக்களும் கலந்துகொண்டனர்.

டி.கே. சீனிவாசன் முழக்கம்

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

கேட்டபோது, 'பர்மிய மக்களுக்காகச் செய்தோம்' என்றனர்.

இலங்கையில் கொத்தலாவலையும் பண்டாரநாயகாவும் அங்குள்ள தமிழர்களைத் துரத்தினார்கள்—துரத்தி வருகிறார்கள்; கொடுமைப்படுத்துகிறார்கள்; உரிமைகளைப் பறிக்கிறார்கள்; கேட்டபோது, 'இலங்கை மக்களுக்காகச் செய்கிறோம்' என்கிறார்கள்.

"ஆனால் நேருவும், பிறரும் எந்தக் காரியத்தையாவது மக்களுக்காகச் செய்தார்களா?

"1948-ல் பண்டிதநேரு அமெரிக்கா சென்றார்; அங்கு தடபுடலான வரவேற்புகளைப் பெற்றுக்கொண்டு, 'பணம் கடன் வேண்டும்' எனக் கேட்டார்; கேட்கும்போது, 'மக்களை வாழ்விக்கப் பணம் தாருங்கள்' என்று கேட்கவில்லை; 'இந்தியா, கம்யூனிஸ்டுகளுக்கு இரையாகிவிடாமல் தடுக்க பணம் தாருங்கள்' என்றுதான் கேட்டார்.

"மகன் வாழ வேண்டும் என்பதற்காக வரன்தேட வேண்டிய ஒருவன், 'நல்ல வரன் இருந்தால் சொல்லுங்கள்; இல்லாவிட்டால் யாருடனாவது என்மகன் ஓடிவிடுவான்' என்று கூறுவதுபோலத்தான், நேருவும், அமெரிக்காவிடம் பணம் கேட்டார்.

"இப்படி இவர்கள், மக்களை நினைத்ததே இல்லை; ஆனாலும் மக்களுக்காக ஆளுவதாக மட்டும் சொல்லுகிறார்கள். இவர்களுக்கும் மக்களுக்கும் என்ன தொடர்பு?

"எகிப்தில் நாசர், அசுவான் அணை கட்ட அமெரிக்காவிடமும், பிரிட்டனிடமும் பணம் கேட்டார்; அவர்கள் தர மறுக்கவே, சூயஸை தேசமயமாக்கினார்; இந்த நாட்டில் உள்ள அத்தனை பத்திரிகைகளும், நாசருக்குப் புதிய புதிய காரணங்களைக் கற்றுத் தருகிற அளவு அந்தச் செயலை வரவேற்று நாசரைப் பாராட்டிப் பெருமைப் படுத்தி, மணி மணியான தலையங்கங்கள் எழுதியிருக்கின்றன; ஆனால், வேறு எந்த ஒரு நாட்டுத் தலைவனையோ பாராட்டுகிற அவை, 'இந்தியத் தலைவர் நேரு ஏன், இங்குள்ள மக்களுக்கு வாழ்வளிப்பதற்காகப் பணம் திரட்டுவதற்கு அது போன்ற ஒரு நடவடிக்கையை மேற்கொள்ளக் கூடாது? என்று கேட்கக் காணோம்!

"இங்கு வெள்ளைக்காரக் கம்பெனிகள் இல்லையா? வெளிநாட்டு மூலதனம் மட்டும் 800 கோடி ரூபாய்க்கு உள்ளதே! அதன் மூலம் கிடைக்கும் இலாபம் கொள்ளை கொள்ளையாய் வெளி நாடுகளுக்குச் சென்றுகொண்டிருக்கிறதே! ஏன் அவற்றைத் தேசிய மயமாக்கக் கூடாது நேரு பண்டிதர்?' என்னார் இல்லாமல், சிப்பந்திகள் இல்லாமல் சுலபமாக வெள்ளையர்கள் இலாபம் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்களே!

"வெள்ளையன் இந்த நாட்டை ஆண்டுகொண்டிருந்த காலத்தில் காங்கிரசார், வெள்ளையர்களை ஏன் வெளியேற்ற வேண்டும் என்று கூறினார்கள்?

"வெள்ளையர்கள் இந்த நாட்டு மக்களிடமிருந்து வரிகளை வாங்கி, ஐ. சி. எஸ். அதிகாரிகளுக்குக் கொட்டிக் கொடுக்கிறார்கள்; கொள்ளையடிக்கிறார்கள்' என்று கூறி, 'வெள்ளையன் வெளியேறினால்—பாரத புத்திரர்கள் ஆட்சிக்கு வந்தால், இந்தக் கொள்ளை தடுக்கப்படும்' என்று காங்கிரசார் கூறினார்கள்.

"பாரத புத்திரர்கள் சிம்மாசனம் ஏறினார்கள்; பட்டம்சூட்டிக்கொண்டார்கள்; ஆனால், அந்தக் கொள்ளையைத் தடுத்தார்களா என்றால் இல்லை; அரசியல் சட்டம் இயற்றுகிற காலத்தில், 'ஐ. சி. எஸ். அதிகாரிகளின் சம்பளத்தைக் குறைக்க மாட்டோம்' என்று விதி நிறைவேற்றினார்கள்.

"'வெள்ளையன் அன்னியன்; ஆகவே, அவனை சாதாரண மக்கள் நெருங்க முடிவதில்லை; குறைகளை எடுத்துக்கூற முடியவில்லை' என்று கூறினார்கள்.

"இப்போது இந்தப் பாரத புத்திரர்கள் பட்டம் சூட்டிக் கொண்ட பிறகு எந்த மந்திரியை சாதாரண மனிதர்கள் நெருங்க முடிகிறது? கூற முடியுமா?

"காந்தியார் தென்னாப்பிரிக்காவிலிருந்த காலத்தில், அங்கே இந்தியனுக்கு அந்தஸ்து இல்லை என்பதைக் கண்டார்; எண்ணிப் பார்த்தபோது, 'நமது நாட்டில் இந்தியர்களுக்கு உரிமை இல்லை; அதனால் வெளிநாடுகளில் இந்தியனுக்கு அந்தஸ்து இல்லை' என்று கண்டார். 'உரிமை பெற்றால், வெளிநாடுகளில் இந்தியனின் அந்தஸ்து உயரும்' என்று கூறினார்கள், காங்கிரசார்!

"ஒன்பதாண்டுகளாகிவிட்டன; இந்தியாவிற்கு அரசியல் உரிமை கிடைத்தது; எங்கே உயர்ந்தது இந்தியனின் அந்தஸ்து?

"இலங்கையில் தமிழர்களை அடித்தார்கள்; உதைத்தார்கள்; பந்தைப்போல உருட்டித் தள்ளினார்கள்; யார் கேட்டார்கள்? கேட்க நாதியில்லாமற்போயிற்றே! 'எவரேனும் கேட்டால்...!' என்று மிரட்டினார் அங்குள்ள பிரதமர்! 'கேட்கவே மாட்டோம்' என்று இங்குள்ள சுப்பிரமணியம் கூறிவிட்டார்! அந்தஸ்து உயர்ந்ததா?

"பர்மாவில் ஆண்டுதோறும் இந்தியர்களைத் துரத்திப் போடுகிறார்கள்; கேட்டார்களா? அந்தஸ்து உயர்ந்ததா?

"தென்னாப்பிரிக்காவில் இந்தியர்களை வெள்ளையன் ஒதுக்கிவைக்கிறான்; ஒன்பதாண்டுகளாகிவிட்டது, பாரத புத்திரர்கள் பட்டம் சூட்டிக்கொண்டு! இந்தியனின் அந்தஸ்து எங்கே உயர்ந்தது?

"காங்கிரஸ் நண்பர்கள் கூறுகிறார்கள்—'நேருவை அகில உலகமும் அழைக்கிறது; ரஷ்யா, சீனா, ஜப்பான், அமெரிக்கா என்று போட்டி போட்டிக்கொண்டு அவரை அழைக்கின்றன; நேரு உயர்ந்திருக்கிறார்' என்று!

"ஒரு நேருவை உயர்த்துவதற்காகவா குமரன் தடியடிபட்டுச் செத்தான்? வ. உ. சி. செக்கிழுத்துச் செத்தார்? பகத்சிங் தூக்குமேடையேறினார்? எத்தனையோ ஆயிரம் பேர் சிறை புகுந்தனர்? பெண்களில் பலர் தாலிகளைக் கொடுத்தனர்?

"ஒரு அமெரிக்கப் படக் கம்பெனிக்காரன் இந்தியாவுக்கு வந்து மைசூருக்குச் சென்றான்; அங்கு சாபு என்ற ஒரு பையன் யானைமேல் ஏறிக்கொண்டு வந்ததைக் கண்டான்; அவனை அமெரிக்காவிற்கு அழைத்துப் போய் படம் பிடித்தான்—எலிபண்ட் பாய் (யானைச்சிறுவன்)—என்று! அன்றுமுதல் அந்த சாபுவை உலகம் புகழத் தொடங்கிற்று; இங்கிலாந்து வரவேற்புத் தந்தது.

"குமரனைக் கொல்லாமல், பகத்சிங்கைப் பலி தராமல், வ. உ. சி.-யைச் சித்திரவதை செய்யாமல் சாபு பெற்ற புகழை நேரு பெறவா இத்தனை தியாகம் செய்தனர் மக்கள்?

[பேச்சு முடியவில்லை; தொடர்ந்து வெளிவரும்]

தென் ஆற்காடு மாவட்ட தி.மு.கழகம்

புதிய செயலாளர் தேர்வு

முன்னாள் செயலாளருக்குப் பாராட்டு

தென்னாற்காடு மாவட்ட தி. மு. கழகப் பிரதிநிதிகள் கூட்டம் 12—8—56 காலை 11 மணிக்கு, கடலூர் (என் டி) 'பிருந்தாவன'த்தில் நடைபெற்றது. துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் தலைமை வகித்தார். ஏராளமான பிரதிநிதிகள் வந்திருந்தனர்.

செயலாளர் இரா. சாம்பசிவம் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசியதோடு, கூட்ட நிகழ்ச்சி விவரங்களை எடுத்துக் கூறினார். பின் கீழ்க்கண்ட முடிவுகள் செய்யப்பட்டன:—

தமது சொந்த அலுவலின் காரணமாக செயலாளர் பொறுப்பிலிருந்து விலகிக் கொள்ள தோழர் இரா. சாம்பசிவம் அவர்களுக்கு பொதுச்செயலாளர் அனுமதியளித்த விவரம் மாவட்டப் பிரதிநிதிகளுக்கு அறிவிக்கப்பட்டது.

தோழர் இரா. சாம்பசிவம் அவர்களுக்குப் பதிலாகத் தோழர் ஏ கோவிந்தசாமி எம். எல். ஏ., அவர்கள், விருத்தாசலம் சி. முனுசாமி முன்மொழிய தோழர் மு கோவிந்தசாமி வழிமொழிய தென்ஆற்காடு மாவட்ட தி. மு. கழகச் செயலாளராகப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

ஏற்கனவே காலியாயிருந்த பொதுக் குழு உறுப்பினர் பதவிக்கு தோழர் இரா. சாம்பசிவம் அவர்கள், தோழர் ஏ கோவிந்தசாமி எம் எல் ஏ., முன்மொழிய, தோழர் அண்ணாமலை வழிமொழிய ஒரே மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பொதுத் தேர்தலில் தென்ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் உள்ள நிலைமையை அறியவும், தேர்தல் குழுவிடம் விவரம் அறிவிக்கவும் தோழர் சொக்கலிங்கம் அவர்களை அமைப்பாளராகக் கொண்ட குழு ஒன்று அமைக்கப் பட்டது.

முன்னாள் செயலாளர் சாம்பசிவம் அவர்கள் கடந்த ஓராண்டுக்கு மேலாகச் செய்த பணியினைப் பாராட்டித் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

புதிய செயலாளரை வரவேற்றுத் தோழர்கள் இரா. சாம்பசிவம், சொக்கலிங்கம் ஆகியோரும் மற்றும் பல தோழர்களும் பேசினர்.

இறுதியாகத் துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள், தென் ஆற்காடு மாவட்டக் கழகம் தனது பணியினை மேலும் சிறப்புறச் செய்ய வேண்டுமென்றும், பொதுத் தேர்தலைப் பற்றியவரை கழகத் தோழர்களும், நிர்வாகிகளும் கடைப்பிடிக்கவேண்டிய முறைகளை விளக்கியும் மாவட்டத்தின் இன்றைய தேர்தல் கூட்டம் இனிது முடிவுற மாவட்டப் பிரதிநிதிகளிடம் காணப்பட்ட கட்டுப்பாடு, தோழமை ஆகியவைகளைப் பாராட்டியும் பேசினார்.

செயலாளர் ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ., அனைவருக்கும் நன்றி கூறக், கூட்டம் பிற்பகல் 1-30 மணிக்கு முடிவுற்றது.

இந்த நிலை ஏன்?

கிழக்காப்பிரிக்காவில் சுற்றுப் பிரயாணம் செய்யப்போகும் இளவரசி மார்கரெட் பிரயாணம் செய்யும் 'பிரிட்டானியா' என்ற கப்பல், சூயஸ் பாதையில் போகாமல் நன்னம்பிக்கை முனையைச் சுற்றிக்கொண்டு கினியாவுக்குப் போகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதிகாரமும் - அழிவும்

லண்டன், ஆக. 13—

சூயஸ் கால்வாய் அதிகாரம் தன் கையை விட்டுப் போவதைக் காட்டிலும், சூயஸ் கால்வாய் அழிவதையே எகிப்து விரும்பும் என்று எகிப்தின் முன்னாள் அயல் நாட்டு மந்திரி மேஜர் சலீம், பேட்டியொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

சென்னை நகர மாணவர்களுக்கு

"சென்னை நகர தி. மு. கழக மாணவர் கிளை கமிட்டிக் கூட்டம் சென்னை இராயபுரம், 'அறிவக'த்தில், 21-8-56 காலை 10 மணிக்கு நடைபெறும்; அதுபோது, 5-8-56ல் நடைபெற்ற 'தேர்தல் நிதி அளிப்பு விழா' கூட்ட வரவு-செலவுகணக்கு, மற்றும் இதர பிரச்சினைகள் பரிசீலிக்கப்படும்.

"கூட்டத்திற்கு, தி. மு. க.—மாணவர் கிளையின்பால் அக்கறை கொண்ட எல்லா மாணவர்களையும் கலந்து கொள்ள வேண்டுகின்றேன்.

"சென்னை நகரிலுள்ள கல்லூரி—பள்ளிகளின் பிரதிநிதிகள் சென்னை நகரைச் சார்ந்த கிளைக் கழகங்களின் நிர்வாகிகள், சென்னை நகரிலுள்ள அமைப்புக் குழு உறுப்பினர்கள் ஆகியோர் அனைவரும் இதனையே அழைப்பாகக் கொண்டு பங்கு கொள்ள பணிவுடன் அழைக்கின்றேன்."

என்று, தி. மு. க.—மாணவர் கிளை அமைப்பாளர், டி. கே. பொன்னுவேலு அவர்கள் அறிவிக்கிறார்.

குறிப்பு:—17—8—56ல் நடைபெறவிருந்த கூட்டமே 21—8—56ல் நடைபெறுகிறது.

அண்ணா

சுற்றுப்பயணம்

ஆக. 19: காலை-பேளுகுறிச்சி
மாலை-இராசிபுரம்
20: காலை-சேலம்
மாலை-குளத்தூர்

துணைப் பொதுச்செயலாளர்

என். வி. நடராசன்

சுற்றுப்பயணம்

ஆக. 15: பண்ணைக்காடு
16: சிவகிரி
17: திண்டுக்கல்
18: சின்னத்தம்பி பாளையம்
19: காலை-பேளுகுறிச்சி
மாலை-இராசிபுரம்
20: காலை-சேலம்

கழகக் கூட்டம்

★

கோணலூர்:
(திருவண்ணாமலை வட்டம்)
பாடசாலைக்கு முன்புறம்
14—8—56 மாலை 6 மணிக்கு

தலைவர்:
டி. எஸ். மணி

பேசுவோர்:
ஏ. எல். சி. கிருட்ணசாமி
வ. குமாரசாமி
மு. சீனுவாசன்
பே. சு. பா. சாரங்கபாணி

★

பண்ணைக்காடு:
(மதுரை மாவட்டம்)
பன்னீர் செல்வம் திடலில்
15—8—56 மாலை 6 மணிக்கு
தி. மு. கழக முதலாவது ஆண்டு விழா
—பாண்டியனூர் நினைவு மன்ற
இரண்டாவது ஆண்டு விழா

பேசுவோர்:
என். வி. நடராசன்
ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ.,
சத்தியவாணிமுத்து
எம். எஸ். இராமசாமி
மு. வசனப்பித்தன்

சூளை எஸ். முத்தையா நினைவுப் பள்ளி வளர்ச்சி நிதிப் படக் காட்சி

15—8—56 காலை 9-30 மணிக்கு, மேற்படி நினைவுப் பள்ளி வளர்ச்சி நிதிக்காக, சென்னை — பெரம்பூர் மகாலட்சுமி தியேட்டரில்,

தோழர் சி. பி. சிற்றரசு தலைமையில்

'கைதி'

என்ற படக் காட்சி நடைபெறும்.

—அமைப்பாளர்கள்:
சூளை தி. மு. கழகம்

சென்னை 12-வது வட்ட மஜீத் மன்றம் 2-ம் ஆண்டு விழா

14—8—56 மாலை 6 மணிக்கு, சென்னை 12-வது வட்டம் (மஜீத் பேட்டை), அக்கப்பநாய்க்கன் தெருவில் தோழர் நா. சேரன் தலைமையில், மேற்படி ஆண்டு விழா நடைபெறும்.

தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, ஏ. கே. வில்வம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்; தோழர் இராதாமாணிக்கம் இன்னிசை வழங்குவார்.

1955-ம் ஆண்டு இடையில், உலக மக்கள் தொகை சுமார் 4 கோடி வரை அதிகரித்திருப்பதாக ஐ. நா. அறிவித்திருக்கிறது. இப்போது உலக மக்கள் தொகை 269,20 00 000 என்று மதிப்பிடப்பட்டிருக்கிறதாம்!

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.